நம்மிடம் இருந்து வெல்லம், சர்க்கரை வாங்கிக்கொள்ளத் தயாராக இருப்பதனால் இவற்றை ஏற்றுமதி செய்ய மத்திய சர்க்காரிடம் இருந்து அனுமதியைப் பெறுவார்களா ?

(விடை இல்லை)

கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகள் நியமனம்.

* 203. வினா.—திரு. என். எஸ். வி சித்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகள் எந்த அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விவரமான விடை * சட்டப் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகள் எந்த அரசியல் கட்சியையும் சேராதவர்களாகப் பார்த்து நியமிக்கப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த ஆட்சி பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு அப்படிப்பட்ட உத்தரவுதான் போடப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். நாகசுந்தரம் : கௌரவ நீதிபதிகளுக்குக் கூடுதலான அதிகாரம் தந்து மதுவிலக்கு போன்ற வழக்குகளை எல்லாம் அவர்களிடம் ஒப்படைக்க அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாடு முழுவதும் கிராம நீதி மன்றங்கள் ஏற்படுத்தப்படவேண்டுமென்ற கொள்கை 1950 பஞ்சாயத்துச் சட்டத்தில் இருந்தது. 1958 சட்டத்தில் அது எடுக்கப்பட்டிருக்கிறது. பழைய வில்லேஜ் கோர்ட் ஆக்ட் இருக்கிறது. இப்போது கிராம நீதி மன்றங்கள் பணியாற்றவில்லை. ஆகவே இதற்கு கௌரவ நீதிபதிகளை நியமித்து தனிச் சட்டமே செய்யலாமா என்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

நீர்ப்பாசனத்துறையிலிருந்து காணமற்போன நிலப் படங்கள்

* 204. வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீர்ப்பாசனத் தலைமை அலுவலகத்திலிருந்து Restricted Maps காணமல் போனது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது ?

101-ம் பக்கத்தில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.